உடன் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, இச்சம்பவம் பற்றி விவாதிக்க பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்று கூறி இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

The Hon. Thiru K. MANOHARAN: Mr. Speaker, Sir permit me to read a statement under Rule 82 (A) of our Assembly Rules.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே சொல்வதற்கு இருந்தேன். பரவாயில்லை. இப்போது சொல்லுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விதி 82 (ஏ) பிரிவின் கீழ் விளக்கம் அளிப்பார்கள்.

3. தகவல் கோரல் :

(அ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள் சிலவற்றை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து; இன்னும் சில அட்ஜர்ன்மெண்ட் மோஷன்கள்எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் எடுத்துக் கொண்டு, அதற்குப் பின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தால் நல்லது. எனவே, அவைகளையும் சேர்த்தார்போல் எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது தகவல்கள் சேகரிக்க வேண்டியிருப்பதால், அதை இன்றைக்கு எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 82-வது விதியின் கீழ் அறிக்கை சமர்ப்பிக்கட்டும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நேற்று நண்பகல், நகரத்தில் மிகவும் பயங்கரமான, மிருகத்தனமான, வன்முறைத் தாக்குதல்கள் மாணவர்கள் மீது................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படப் போவதில்லை. எத்தனை மணிக்குக்கொடுத்தீர்கள்? எதையும்சற்றுபொறுப்புணர்ச்சியோடு பேசுங்கள். காலை 8—48-க்கு என் அறையில் கொண்டு

1977 ஜூலை 27] [பேரவைத் தலைவர்]

வந்து கொடுத்ததற்கு, தகவல்கள் இன்னும் சேகரிக்க முடியாததால், தகவல்கள் சேகரித்தவுடன் நாளைக் கொண்டு வருகிறேன் என்றுதான் சொன்னேன்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, நான் தங்கள் அறையில் 8—40-க்கு கொடுத்தபோது, இதை நான் விடப் போவதில்லை, இன்றைக்கே எடுத்துக் கொள்கிறேன் என்று உறுதி கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையிலே வந்து பொறுப்பில்லாமல் பேசுவது அழகல்ல. இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படப் போவதில்லை, நாளைக்கு எடுப்பேன் என்று உறுப்பினர் மாரிமுத்து அவர்களுக்குச் சொன்னதுதான் உங்களுக்கும். உட்காருங்கள். அவைத் தலைவர் விளக்கம் கொடுத்த பிறகு சும்மா எழுந்திருக்கக் கூடாது. ஒரு உறுப்பினர் கொடுத்ததற்குச் சொன்ன அதே பதில் உங்களுக்கும் பொருந்தும். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அளிக்கப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானம் சென்னை நகரிலே நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றியது. தமிழகத்திலே, வெகு தொலைவிலே நடைபெற்ற நிகழ்ச்சியாக இருந்தால், அதுபற்றிய தகவல்களைச் சேகரித்து, பதில் அளிப்பதற்கு முதல் அமைச்சர் அவர்களுக்கு அவகாசம் இருந்திருக்காது. ஆனால், இதுவோ சென்னை நகரிலே நடைபெற்ற நிகழ்ச்சியாகும். இதுபற்றி எப்படியும் முதல் அமைச்சர் அவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். அதை அறிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவ்வளவு அக்கறையற்றவராக முதல் அமைச்சர் அவர்கள் இருக்கமாட்டார்கள் என்று நிச்சயமாக நான் நம்புகிறேன். எனவே, அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு, அதைப்பற்றிய தகவல்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து விளக்குவது பொருத்தமாக இருக்கும்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு நான் நன்றி கூறக் கடைமைப் பட்டிருக்கிறேன். ஒன்றை நான் சொல்லியாகவேண்டும். அதிகாரிகள் கொடுக்கின்ற செய்திகளைப் பெற்றுக்கொண்டு, மற்றும் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், மாணவர்கள் தருகின்ற செய்தியையும் விசாரித்து பொறுப்போடு சொல்ல வேண்டுமென்ற காரணத்தால்தான் விவரங்களைச் சேகரிக்க விரும்புகிறோமே தவிர,

அதிகாரிகள் கொடுக்கின்றவைகளை பாடப்புத்தகம் போல் ஒப்பித்துவிட்டுப் போவது பொறுப்புக்கு உகந்ததாக இருக்காது என்ற நேர்மையான காரணத்தால்தான் நான் அதைக் கேட்டிருக்கிறேன். நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் சொல்லிக் கொண்டதும் அதுதான். நானும் என்னுடைய பொறுப்பை உணர்ந்து, நான் மிகவும் எச்சரிக்கையாகக் கடைமையைச் செய்ய வேண்டுமென்ற நிலைமையில் விரைவில் விவரங்களைச் சேகரித்துக் கொடுக்கிறேன் அதோடு மட்டுமல்லாமல் இன்றையதினம் பகலில் மாணவர்கள் தலைவர்களை, பிரின்சிபால்களை அழைத்து கல்வியமைச்சர் பேச இருக்கிறார்கள். அதையும் சேர்த்து, மற்ற விவரங்களையும் சேகரித்து நாளையதினம் இந்தக் கேள்விகளுக்கு சரியான பதில் கொடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

4. அறிக்கை அளித்தல்

நிதிநிலை அறிக்கை உரை குறித்து நிதி அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் 25—7—1977 அன்று காலையில் பேரவையில் ஆற்றிய நிதிநிலை அறிக்கையின் உரையில் 32-வது பக்கத்தில் 50-வது பாராவில் உள்ள கடைசி வாக்கியத்தில் குறிப்பிட்டுள்ள 'தெளிந்த சாராவி' (Rectified spirit) மீதான ஆயத் தீர்வை ஒரு முழு லிட்டருக்கு (Bulk litre) தற்போதுள்ள 50 காசிலிருந்து 80 காசாக உயர்த்தப்படும் என்று பேரவையில் அறிவித்தேன். அவ்வாறு அறிவித்ததற்குப் பிறகு ஒரு திருத் தமும் அறிவிக்கப்பட்டு அது தற்போதுள்ள 80 காசு 110 காசாக உயர்த்தப்பட வேண்டுமென்ற திருத்தமும் பேரவை உறுப்பினர்களுக்குத் தரப்பட்டது. ஆனால் மேலவையில் நான் இதை எனது உரையிலே திருத்தி முழு லிட்டருக்கு (Bulk litre) ஆயத் தீர்வை 80 காசு 110 காசாக உயர்த்தப்படும் என்பதை அறிவித்தேன் ஆனால், பல்க் லிட்டருக்குத் தற்போது இருக்கும் தீர்வை 50 காசுதான். ஆகவே, பேரவை உரையில் முதலில் குறிப்பிடப்பட்ட "பல்க் லிட்டருக்கு 50 காசிலிருந்து 80 காசாக உயர்த்தப்படும்" என்பதே சரியானது. இப்போது அதிகப் படுத்தப்பட்டுள்ள தீர்வையில் ஒன்றும் மாற்றம் கிடையாது என்பதை அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்பு கிறேன்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நேற்றையதினம் ஒரு திருத்தம் அவரவர் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. அந்தத் திருத்ததை நாவ